# விசாகம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,
சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ விசாகம் சக்தி**

பரதுரிய அனுபவம், துருதுரிய, பதமம்,
பகம், பகாதீத விமலம்

**3. திருப்பாவைபாசுரம் – 8 விசாகம் இயல்பு**

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோது கலமுடைய
பாவாய் எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/GyXoBF-q8Iw**

**விளக்கம் :**

உடம்பு என்னும் ஆலயத்திற்கு ஒன்பது வாசல். கண்ணிரண்டு, செவியிரண்டு, நாசியிரண்டு, வாய் ஒன்று, எட்டாவது வாயில் உள்நாக்கு ஒன்பதாவது வாசல் புருவமத்தி !! கீழ்வானம் வெளுத்தது என்றால் அதுவே

துரியத்தின் அனுபவமாகும். பரதுரியமானாலும் குருதுரியமானாலும் கிழக்கு வெளுக்க வேண்டும். இயற்கையில் கிழக்கு வெளுத்தால் கீழ்வானம் சிவக்கும். ஆனால் இந்த விசாகத்தில் கீழ்வானம் வெளுத்தால் தனக்கு தானே குருவாக இருந்து தனக்கென்று ஒரு தனி வழியை ஏற்படுத்தி சிறப்பான தமிழ்வழியில் நடப்பதே விசாகத்தின் தனித்தன்மையாகும்.

இந்த திராவிட தனி வழி சுய ஆட்சி அடுத்த வரியில் எருமை வீடு என்று சித்தரிக்கப்பட்டுள்ளது. வள்ளல் பெரும் பசுக்கள் பல இடங்களில் இருந்தாலும் எருமை சிறுவீடு என்னும் எந்திரலாபம் மற்றும் மந்திரமகிமை கூடிய தந்திர வியாபாரம் விசாகத்திற்கு மட்டுமே உள்ளது. உலகத்தில் தனக்கு தானே முதல் குரு, தகப்பன் சாமி என்று பெயர் பெற்ற பிரணவ குரு முருகன், விசாகத்திற்கு சொந்தக்காரர். விலை மோரையும் விற்ககூடிய அதீத விளம்பர நுணுக்கங்கள் விசாகத்தில் மலர்ந்து கிடக்கும். அதே நேரத்தில் தனக்கு தனக்கென்று ஒரு துறையை ஏற்படுத்தி உலகறிய செய்து மலங்களை (ஆணவம், கன்மம், மாயை) இவற்றை வெற்றி பெற வினோத வழிகளை மக்களுக்கு எடுத்து உரைப்பதில் வல்லவர்கள். எனவே தான் வானம் வெள்ளையாகவும், எருமை கறுப்பாகவும் முதல் வரியிலே கூறப்பட்டுள்ளது.

அனுபவங்கள் சிறுவீடாயினும் மாறிலாவள்ளி வாழ்க என்ற தொழில் தத்துவத்தை வளர்க்க பிறந்தவர்களே விசாகம். மாறிலா வள்ளி என்ற தொழில் ஒரு புறம் இருக்க தேவாதி தேவனாக தேவலோக மகள் தெய்வானையை (தேவயானை) மணம் புரிந்த விசாகத்தின் அருள் வெற்றியை கொடுக்க

வல்லதாகும். எல்லா காரியங்களும் பல்கி பெருகி சாதனை புத்தகத்தில் பதியும் அளவிற்கு சோதனைகளை வெல்வதில் மாவாய் பிறந்தானை, மல்லரைமாட்டிய அம்சங்கள் பல வாழ்வில் எதார்த்தமாக அமையும்.

இவைகளில் நல்லவை, அல்லவை எதுவாயினும் அவற்றை ஆராய்ந்து அருள வேண்டுமாய் கேட்டு மனித மனத்தை சிறக்கச் செய்யும்.

ஆவாவென்றாராய்ந்து அருளேலோர் விசாகமே ஆகும். தேவாதி தேவனாய் இருந்து பரதுரிய அனுபவமும், குருதுரிய பதமும் தந்து சாதனை செய்பவர்களே விசாகத்தை சேர்ந்தவர்கள். உலகத்தில் முதல் தேவகுரு விசாகமே ஆகும். வெளிப்படையாக தனக்கென்று தனியான வழியை ஏற்படுத்தி பாடி பறை கொண்டு பகாதீத விமலங்களை சாதித்து காட்டுபவர்களே விசாகம்.

முதலான முதல்குரு முருகன் முடிவான முதல்குரு புத்தர்வரை இருவருமே விசாக நக்ஷத்ரமாகும். கீழை நாடுகளில் மல்லர்களை எல்லாம் மண்கவ்வச் செய்து சிறப்பு வழியான பௌதத்தை பரப்பிய பெருமை விசாகத்திற்கு உண்டு. பல்வேறு வழிகளில் போவான் போகின்றாரைப் போகாமல் காத்து தனக்குரிய துரிய அனுபவ குரு வழியில் செலுத்தும் திறமை விசாகத்திற்கு உண்டு.

கறுப்பும், வெள்ளையும் தன்னகத்தே மயிலும் சேவலும் போல கீழ்வானம் வெண்மையாகவும், எருமை சிறு வீடு கறுப்பாகவும் மேய்வான்

பரந்தனகாண் என்று சொல்லி வந்த வேலையை கச்சிதமாக லாபத்துடன் முடித்து காட்டுபவர்களே விசாகத்தின் முருகர்கள் ஆவார். மாறிலா வள்ளியாக எப்பொழுதும் லாபம் தரும் விசாகமாக குறைகளைந்து அருள் பாலிப்பவர்களே விசாகம் ஆகும்.

## 4. வேதத்தில் விசாகம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

இந்தராக்நௌச வித்மஹே
மஹாச்ரேஷ்ட்யைச தீமஹி
மதிபத்நி தீமஹி
தன்னோ விசாகா ப்ரசோதயாத்;

அறிவும் திறனும் நிறைந்தாயே
அனுபவ வல்லமை கொண்டாயே
ஞானம் வீரம் நனி சிறக்க
ஞானம் வியக்கும் சிறப்பானாய்

சாகசம் வெற்றியின் பிறப்பிடமாய்
சகல கர்மங்கள் கடந்திடவே
தனிவழி கண்டு தான் சிறந்தாய்
முகவரி தந்தாய் நமோ நமோ;

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. விசாகம் கவிதை

என் வழி, என் விழி, என் விளி, என் அளி, தனி வழி
என் குரு, மன் குரு, வன் குரு, சித் குரு, தனி குரு
என் பணி, ஆண் பணி, ஆள் பணி, ஆல் பணி, தனி பணி
என் அணி, பண் அணி, வின் அணி, விண் அணி, தனி அணி

உலகியல் உணர்ந்து, அறிந்து, அனுபவித்து ஆள்வோமே
உச்சத்தில் தெளிந்து, துரியத்தில் படிந்து பாடுவோமே
அச்சத்தை தவிர்த்து, ஆச்சர்யத்தை அடைந்தாடுவோமே
மச்சத்தை மகிழ்ந்து, மாயையை மணந்து கலப்போமே

விமல சாகசமெனில் அடைந்தே ஆட்டுவாய் நீ
விபுல சாகசமெனில் புணர்ந்ததே காட்டுவாய் நீ
விபவ சாகசமெனில் நடத்தியே கூட்டுவாய் நீ
சாதித்தல் உனக்கியல்பே – சோதித்தல் வினையாலேயே

கார்த்திகைப் பெண்கள் ஊட்டி வளர்த்த கார்த்திகேயா
காலத்தில் தேவலோக தெய்வானை பார்த்திராயே
கணிசத்தில் மலைக்குறத்தி அலைகிடத்தி வலையிட்டாயே
வணிகத்தில் விலை ஊடகத்தில் மாறிலா வள்ளி வாழ்க

நாதவிந்து கலாபி நமோ நமோ
        நாத விநோத கலாபி நமோ நமோ
போத வேதாந்த படனம் நமோ நமோ
        பேத வேதாந்த விநாயகம் நமோ நமோ

திருச்செந்தூரில் செந்தில் நாதன் அரசாங்கம்
திருக்குகையூர் பட்டு மலாயில் பறைசாற்றும்
திருவாதின குடியில் பாஷாணம் நவமாய் கறைபோக்கும்
திருஅறிவியலில் பொருந்துகின்ற சவாலையும் ஏற்கும்

ஓம் முருகா வாமுருக வடிவேல் அழகா
ஆம் முருகா தாமுருகா கைமேல் மருகா

## 6. அபிராமி அந்தாதியில் விசாகம் சக்தி

**வறுமை ஒழிய**

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்

உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்

செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்

மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.

**மனஅமைதி பெற**

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்

தருணாம் புயத்தும் முலைத்தையல் நல்லாள், தகை சேர்நயனக்

கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்,

சரணாம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.

**பிள்ளைகள் நல்லவர்களாக வளர**

தஞ்சம் பிறதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே

நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை; நீள்சிலையும்

அஞ்சும் அம்பும் மிக்கலராக நின்றாய்; அறியார் எனினும்

பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.

**மெய்யுணர்வு பெற**

பாலிலும் சொல் இனியாய்! பனி மாமலர்ப்பாதம் வைக்க

மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை வார்சடையின்

மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு

நாலினும் சாலநன்றோ அடியேன் முடைநாய்த்தலையே?

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் விசாகம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் ஸ்ᵒதந்வநே நம – சாரங்கமெனும் ஞானவேலே போற்றி

ஓம் கண்டபராஸவே நம – அனைத்து சக்திகளின் கூட்டணி வேலே போற்றி

ஓம் தாருணாய நம – தவறென்றால் உடன் தண்டிக்கும் வேலே போற்றி

ஓம் த்ரவிணப்ரதாய நம – வேண்டுபவர் குறை உடன் தீர்ப்பவரே போற்றி

ஓம் திவஃஸ்ப்ருஸே நம – புனிதப் பேரொளியே போற்றி

ஓம் ஸர்வத்ருக்வ்யாஸாய நம – அனைத்தும் கொண்ட தனி உலகமே போற்றி

ஓம் வாசஸ்பதயே – அயோநிஜாய நம – கருவில் பிறவாத கருத்தியல் ஞானியே போற்றி

ஓம் த்ரிஸாம்நே நம – சாம வேத கான மழை சுகம் காண்பரே போற்றி

ஓம் ஸாமகாய நம – இசையினில் சாம வேத சங்கதியே போற்றி

ஓம் ஸாம்நே நம – சுயமாக சாம கானம் இசைப்பவரே போற்றி

ஓம் நிர்வாணாய நம – ஆண்டிக்கோலமொரு நிர்வாண இளவலே போற்றி

ஓம் பேஷஜாய நம – சம்சார பந்தங்களில் புரட்சி பூங்காற்றே போற்றி

ஓம் பிஷஜே நம – ஸ்கந்த குரு வைத்திய நாதனே போற்றி

ஓம் ஸந்யாஸக்ருதே நம – துறவறத்தின் நான்காம் நிலை மோக்ஷமே போற்றி

ஓம் ஸமாய நம – சாதிக்கும் மன ஆற்றல் சோதனைகளை வெல்லுமே போற்றி

ஓம் ஸாந்தாய நம – சாதனை தங்க பதக்கமாயினும் ஒரு தங்க சரணாலயமே போற்றி

ஓம் நிஷ்டாயை நம – பிரளயத்தையே தள்ளி வைக்கும் தனிவழியே போற்றி

ஓம் ஸாந்த்யை நம – போதுமென்ற பொழுதை வர்ணிக்கும் வார்ப்பே போற்றி

ஓம் பராயணாய நம – விமலம் எனும் மும்மலங்களை வெற்றி கண்டவனே போற்றி

ஓம் ஸுᵒபாங்காய நம – சுபமான அழகே போற்றி

ஓம் ஸாந்திதாய நம – எல்லையில்லா சுதந்திரமே போற்றி

ஓம் ஸ்ரஷ்ட்ரே நம – ஆக்கபூர்வமான ஞான ஆரம்பமே போற்றி

ஓம் குமுதாய நம – குமுதத்தின் கலை அமுதமே போற்றி

ஓம் குவலேஸாய நம – குவலயத்தின் தனிவழி அரங்கேற்றமே போற்றி

ஓம் கோஹிதாய நம – குன்று தோறாடும் குமரனே போற்றி

ஓம் கோபதயே நம – நவீன கண்ணனே போற்றி

| | |
|---|---|
| ஓம் கோப்த்ரே நம | – இல்லறமும், இனிய தொழிலும் இரு கண்களே போற்றி |
| ஓம் வ்ருஷபாஷய நம | – மாயைகளை தன்னுள் அடக்கி சுகங்காண்பவனே போற்றி |
| ஓம் வ்ருஷப்ரியாய நம | – முருகன் கடைக்கண்களே முடிந்த வாழ்த்துக்களே போற்றி |
| ஓம் அநிவர்த்திநே நம | – தர்மமே காப்பு போற்றி |
| ஓம் நிவ்ருத்தாத்மநே நம | – அசுரர்களின் எதிரியே போற்றி |
| ஓம் ஸம்க்ஷப்த்ரே நம | – புலன் உணர்வின் அடக்க நிலையே போற்றி |
| ஓம் க்ஷமக்ருதே நம | – அடக்கமே போற்றி |
| ஓம் ஸிவாய நம | – திரு அருளே போற்றி |
| ஓம் ஶ்ரீவத்ஸவக்ஷஸே நம | – சரஹணபவனே போற்றி |
| ஓம் ஶ்ரீவாஸாய நம | – இலக்குமி அருள் நிலையே போற்றி |
| ஓம் ஶ்ரீபதயே நம | – திரு ஆவினன் குடியே போற்றி |
| ஓம் ஶ்ரீமதாம்வராய நம | – ஞான சக்தியே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் விசாகம் சக்தி

த்தவாஸனா தத்வமயீபஞ்சகோசாந்தரஸ்திதா
நிஸ்ஸீமமஹமா நீத்யயேளவநாமதசாலினீ

மதகூர்ணிதரக்தாக்ஷமதபாடலகண்டபூ
சந்தன த்ரவ திக்தாங்கீ சாம்பேய குஸுமப்ரியா

குசலாகோமலாகாராகுருகுல்லாகுலேச்வரீ
குலகுண்டாலயாகௌலமார்கதத்பர ஸேவிதா

குமாரகணநாதான்பாதுஷ்டி புஷ்டிர்மதிர்த்ருதி
சாந்தி ஸ்வஸ்திமதீ காந்திர்நந்தினீ விக்ன நாசினீ

தேஜோவதீ த்ரிநயநாலோலாக்ஷ காமரூபிணீ
மாலினீ ஹம்ஸினீ மாதாமலயாசல வாஸினீ

ஸுமுகீ நலினீ ஸுப்ருசோபனா ஸுரநாயிகா
காலகண்டீ காந்திமதீ க்ஷோபிணீ ஸூக்ஷ்மரூபிணீ

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் விசாகம் சக்தி

நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்

பக்தர்களும் போற்றும் பழனிமலை முருகா கேள்

கொங்கு தேசத்திலே குன்றுதோறும் குடிகொண்டோய்

சீலம் நிறைந்த சேலம்மா நகரத்தில்

கன்னிமார் ஓடையின்மேல் ஸ்கந்தகிரி அதனில்

ஸ்கந்தா ச்ரமத்தினிலே ஞானஸ்கந்த ஸத்குருவாய்

அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமூல மானகுரோ

அயர்ச்சியை நீக்கிடுவாய் என் தளர்ச்சியை அகற்றிடுவாய்

ஸூகவனே சன்மகனே ஸூப்ரமண்ய ஜோதியே

பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிடச் செய்திடப்பா

பரமானந்தமதில் எனைமறக்கப் பாலிப்பாய்

மால்மருகா வள்ளிமணவாளா ஸ்கந்தகுரோ

சிவகுமரா உன்கோயில் ஸ்கந்தகிரி என்றுணர்ந்தேன்

ஜோதிப் பிழம்பான சுந்தரனே பழனியப்பா

சிவஞானப் பழமான ஸ்கந்த குருநாதா

பழம் நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ

திருவாவினன் குடியில் திருமுருகன் ஆனாயோ

குமரா முருகா குருகுஹா வேலவனே

அகத்தியர்க்குத் தந்து ஆட்கொண்டாய் தமிழகத்தை

கலியுக வரதனென்று கலகமுனி உனைப் புகழ்ந்தான்

ஔவைக்கு அருள் செய்த அறுமுருகவா ஸ்கந்தகுரோ

ஒழுக்கமொடு கருணையையும் தவத்தையும் தந்தருள்வாய்

போகருக்கருள் செய்த புவன சுந்தரனே

தண்டபாணித் தெய்வமே தடுத்தாட் கொண்டிடப்பா

ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டுடனே

தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே

ஸ்கந்தகிரி மேலே ஸ்கந்தகிரி ஜோதி யானவனே

கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணையுள்ள ஸ்கந்தகுரோ

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

**10. கந்தர் அநுபூதி விசாகம் சக்தி**

இல்லே எனும் மாயையில் இட்டனை நீ

பொல்லேன் அறியாமை பொறுத்திலையே

மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்

சொல்லே புனையும் சுடர் வேலவனே.(29)

செவ்வான் உருவில் திகழ் வேலவன், அன்று

ஒவ்வாதது என உணர்வித் ததுதான்

அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்

எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே.(30)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

**11. ராகங்களில் விசாகம் சக்தி**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| பாவனி | ரகுபிரியா | ரகுபிரியா | காவம்போதி |

**12. மூலமந்திரம்**

ஓம் சரஹணபவநமோ

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| விளா | சிம்சுபா | பூவன் | தூங்குமூஞ்சி |

## 14. பரிகாரம்

- மண்பாணையில் நீரை எடுத்து ஈசானி மூலையில் வைக்கவும்,
- வாழைப்பழம் தானம் செய்யவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில்,** பன்பொழி - செங்கோட்டை.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra